பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 | வள்ளுவர் ஆண்டு 2055 | தை 28 | திங்கட்கிழமை | 12.02.2024 | கதிர் 97

# நிறைவேற்று அதிகாரத்தை நீக்க சு.கட்சி முழு ஆதரவு

## முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால அறிவிப்பு

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்குவதற்கு ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்க முயற்சி எடுத்தால் அதனை சிறீலங்கா சுதந்திரக் கட்சி முழுமையாக ஆதரிக்கும் என்று அக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நிகழ்வொன்றில் கலந்து கொண்டு நேற்று உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த வருடத்தில் ஜனாதிபதி தேர்தலை நிச்சயமாக நடத்த வேண்டும். எனினும்கருஜெயசூரியவிடத்தில் உத்தியோகத்தர்களை வழங்கி, மக்கள் ☞ 2

## இது ரகசியம் அல்ல!

தமிழ்அரசுக்கட்சியின்உள்வீட்டுப் பிரச்சினைக்குச் சமரசத் தீர்வு காணும் முயற்சிகள் பாதிக் கிணறு தாண்டியநிலையில்தத்தளிக்கின்றது. கட்சியில் பதவி விலகிச் செல்லும் பதில் பொதுச் செயலாளர் மருத்துவர் சத்தியலிங்கத்தின் வவுனியா இல்லத்தில் நேற்று ஒரு கூட்டம் நடத்தப்பட்டது. நான் நேற்றே சொன்னதைப் போன்று முதலில் நேற்றைய தினம் கட்சியின் பதவி விலகிச் செல்லும் மத்திய குழுவின் கூட்டத்தைக் கூட்டுவது என்று திட்டமிட்டபோதும் சட்டப்படி அதற்கு ஒத்துழைப்பு கிட்டாது என்கிற காரணத்தால் சமரச முயற்சிக் கூட்டமாக மருத்துவர் சத்தியலிங்கத்தின் தனிப்பட்ட அழைப்பின் பேரிலான சந்திப்பாக அது மாற்றப்பட்டிருந்தது. ☞ 2

# மின்சாரக் கட்டணங்கள் 35 % குறையவேண்டும்

## பாவனையாளர்கள் சங்கம் வலியுறுத்து

மின்சார சபை தற்போது அடைந்து வரும் இலாபத்தின் அடிப்படையில் 35 சதவீத கட்டணக் குறைப்பை மேற்கொள்ள வேண்டும். ஜனவரியில் கண்டணக் குறைப்புச் செய்வதாக அறிவித்த ஆளும் தரப்பு இன்னும் அதைச் செய்யவில்லை என்று மின்பாவனையாளர் சங்கத்தின் உறுப்பினர் எஸ்.சுந்தரலிங்கம் ☞ 2

# 225 எம்.பிக்களில் எருடனும் கூட்டணியே வைக்கமாட்டேன்

## ஜனக்க ரத்நாயக்க அறிவிப்பு

தற்போதைய நாடாளுமன்றத்தில் உள்ள 225 உறுப்பினர்களில் எவரையும் இணைத்து கொண்டு அரசியல் கூட்டணி அமைப்பதில்லையென பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனக்க ரத்நாயக்கவுக்கும் தேசிய சிவில் அமைப்பு முன்னணிக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம்; கைச்சாத்திடும் நிகழ்வு நேற்று கொழும்பில் நடைபெற்றது.

இதனையடுத்து செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

நானும் ஒன்றிணைந்த சிவில் அமைப்புகளின் முன்னணியும் ஒரே கொள்கை நிலைப்பாட்டில்உள்ளோம். அந்த வகையில், 225 ☞ 8

# காமினியின் சுகநலனை நேரில் விசாரித்த ரணில்

தற்போது சுகவீனமுற்றுள்ள முன்னாள் அமைச்சர் காமினி ஜெயவிக்ரம பெரேராவின் நலம் விசாரிப்பதற்காக நேற்று கடுகம்பலையில் உள்ள அவரின் இல்லத்திற்குச் சென்ற ஜனாதிபதி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முன்னாள் அமைச்சரின்நலன்பற்றிவிசாரித்ததோடு சிறிது நேரம் அவருடன்உரையாடலில் ஈடுபட்டார்.

குடும்ப உறுப்பினர்களிடம் அவர் பற்றிய தகவல்களை கேட்டறிந்த ஜனாதிபதி, காமினி ஜெயவிக்ரம பெரேராவின் வீட்டிற்கு அருகில் ஒன்று கூடிய பிரதேச மக்களுடன் சிநேகபூர்வமாகஉரையாடினார்.

முன்னாள்அமைச்சர் அகிலவிராஜ்காரியவசம், காமினி ஜெயவிக்ரம பெரேராவின்புதல்வரும் வடமேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான அசங்க ஜெயவிக்ரம, குருநாகல்மாவட்ட ☞ 2

# உண்மை ஆணைக்குழு பற்றி கொழும்பில் கலந்துரையாடல்

உண்மை,ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான சுயாதீன ஆணைக்குழுவை நிறுவுவதற்கான உத்தேச சட்டம் தொடர்பில் ஆலோசிப்பதற்காக, உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறைக்கான இடைக்கால செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட சம்பந்தப்பட்ட தரப்பினர்களுடனானகலந்துரையாடல் அண்மையில் கொழும்பில் நடைபெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர்பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் மற்றும் சட்டம் தொடர்பான பேராசிரியை சாவித்ரி குணசேகரஆகியோரின் தலைமையில் நடைபெற்றஇந்தகலந்துரையாடல், உண்மை மற்றும் நல்லிணக்கப் பொறிமுறைக்கான இடைக்கால செயலகத்தின்கொள்கைப்பிரதானி கலாநிதி சி.வை.தங்கராஜாவின்உதவியுடன் அதன் பணிப்பாளர் நாயகம் கலாநிதி அசங்க குணவம்சவினால் நெறிப்படுத்தப்பட்டது. இதில் அரச அதிகாரிகள், சிவில்சமூகப்பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் மற்றும் சட்டம் மற்றும் நிலைமாறுகால நீதித்துறையில் உள்ள அறிஞர்கள் உட்படபலர் கலந்து கொண்டனர்.

வடக்கு மற்றும் கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் குறைகளை நிவர்த்தி செய்வதில்பெரும்பங்காற்றக்கூடிய உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுவின் வரைவின் பல்வேறு அம்சங்களைப்பற்றிக் கலந்துரையாடுவதும் நாட்டில் மீண்டும் போர் ஏற்படாத வகையில் நல்லிணக்கத்தைக்கட்டியெழுப்புவது தொடர்பில் ஆராய்வதும் இந்தகலந்துரையாடலின் பிரதான நோக்கமாக இருந்தது.

உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறைக்கான இடைக்கால செயலகம் உண்மை, ஒருமைப்பாடு மற்றும் ☞ 8

# சிறுவர்களின் கல்லீரல், செவிப்புலன் அறுவை சிகிச்சைக்கு அரச நிதி உதவி

ராகம போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படும் சிறு குழந்தைகளின் கல்லீரல் மாற்று சத்திரசிகிச்சை மற்றும்சிறீஜயவர்தனபுர வைத்தியசாலையில் குழந்தைகளுக்கு மேற்கொள்ளப்படும் செவிப்புலன் மாற்று சத்திரசிகிச்சை என்பவற்றுக்காக ஜனாதிபதி நிதியில் இருந்து நிதியுதவி வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

நாட்டின் எதிர்கால நலனுக்காகவும் வறிய பெற்றோர்களின்நலனுக்காகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்தஅறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

வடகொழும்பு பொது வைத்தியசாலையில் (ராகம போதனா வைத்தியசாலை) மேற்கொள்ளப்படும் சிறு குழந்தைகளின் (16 வயதிற்குட்பட்ட) கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைக்கு முன்னும் பின்னும் பரிசோதனைகள் மற்றும் சிகிச்சைக்கான அதிக செலவைக் கருத்தில் கொண்டு, சாதாரண மற்றும் ஏனைய நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படும்பட்சத்தில் கல்லீரல்மாற்றுஅறுவை சிகிச்சைக்காக 01-01-2024 முதல் ஜனாதிபதி நிதியில் இருந்து ஒரு மில்லியன் ரூபா வழங்கப்படும்.

அத்துடன், இலங்கையில் 200க்கும் மேற்பட்ட குழந்தைகள்செவிப்புலன் மாற்று சத்திரசிகிச்சை தேவைப்படும்நிலையில் பிறப்பதாக மருத்துவ பரிசோதனைகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது. உலகில் அபிவிருத்தியடைந்த நாடுகளில், இந்த அறுவை சிகிச்சை தேவைப்படும் குழந்தைகளைபிறக்கும் போதே கண்டறிந்து, பிறக்கும்போதே தேவையான அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது. ☞ 10

# இந்தியாவுடன் உறவு முக்கியம் ஜேவிபி எம்.பி. ஹேரத் கருத்து

இந்தியாவுடனான உறவு மிகவும் முக்கியமானதாகின்றது. நாம் மக்களுக்கான அரசியல் செயற்பாட்டளர்கள்என்ற வகையில், பூகோள அரசியலை தெளிவாக புரிந்து கொண்டுள்ள அரசியல் கட்சி என்று ஜேவிபி நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

பெலவத்தவில்உள்ள தேசிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில்நேற்று செய்தியாளர்களிடம் பேசும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும்தெரிவித்ததாவது:

இந்தியா எமது வலயத்தில் எமது நாட்டுக்கு அருகில் உள்ள நாடு. அந்தவகையில்பிராந்திய ஒத்துழைப்பினை வளர்ப்பதற்கு இந்தியப் பயணம் மிகவும் முக்கியமானதாக உள்ளது.

அதேபோன்று தேசிய மக்கள் சக்தி அரசியல் ரீதியாக பெரும் வெற்றியை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றது. அவ்வாறான நிலையில் நாட்டின் எதிர்காலத்துக்காகச் சர்வதேச நாடுகளுடன் இருதரப்பு உறவுகள் மிகவும்முக்கியமானவையாக உள்ளன.

விசேடமாக இந்தியாவுடனானஉறவுமிகவும் முக்கியமானதாகின்றது. நாம் மக்களுக்கான அரசியல் செயற்பாட்டளர்கள் என்ற வகையில், பூகோள அரசியலை தெளிவாக புரிந்து கொண்டுள்ள அரசியல் கட்சி. அதேபோன்று எந்தவொருநாட்டுடனும், கொடுக்கல்வாங்கலைச் செய்வதற்கும் நாம் தயங்கப்போவதில்லை.

எம்மைப்பொறுத்தவரையில்எமதுஆட்சிஅரசியல் மற்றும் பொருளாதார இருதரப்பு உறவுகளையும் மையமாக கொண்டிருக்கின்றன.

எமது வெளிநாட்டுக்கொள்கைஎந்தவொரு தரப்பினரையும் சாராத வகையிலேயேகாணப்படுகின்றது. மக்களின் தலைவர் என்பது அநுரகுமார என்பது தற்போது காணப்படுகின்ற விடயமாகும். ஆகவே அந்த விடயத்தினை அவர்கள் புரிந்து கொண்டு எமக்கான அழைப்பினை விடுத்திருந்தனர் என்றார்.

# "ரணிலை விட்டால் ஆள் இல்லை" ஐ.தே.கவுக்கு திரும்பியவர் கருத்து

ரணில்விக்கிரமசிங்க இன்றி இந்த நாட்டை எவராலும் முன்னெடுத்துச் செல்ல முடியாது என்று ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து வெளியேறி மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்துள்ள கட்டுக்கம்பளை தொகுதி அமைப்பாளர் அசங்க பெரேரா தெரிவித்தார்.

கட்டுக்கம்பளை தொகுதியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார். அவர்அங்கு மேலும்தெரிவித்ததாவது:

ஐக்கியதேசியக்கட்சி எனது பழைய வீடாகும். நான் அதற்கு மீண்டும்வருகைதந்துள்ளேன். அதில் தவறு இல்லை. ரணில்விக்கிரமசிங்க இன்றி இந்த நாட்டை எவராலும் முன்னெடுத்துச் செல்ல முடியாது.

அண்மைய நாட்களில் சஜித் பிரேமதாசவுடன் இருந்த பெரும்புள்ளிகள் பலர் வெளியேறி விட்டார்கள். அடுத்துவரும் நாட்களில் எஞ்சியுள்ளவர்களும் வெளியேறவுள்ளார்கள்.

அவர்களில் பலர் எம்முடன் இணைந்து கொள்ள வுள்ளனர். ஆகவே சஜித் பிரேமதாசவினால்தலைமையை ஏற்று நாட்டை முன்கொண்டு செல்ல முடியாது என்றார்.

## இனி இது .....

கூட்டத்திற்கு முக்கியமாக சண்டைக்காரர்களான மட்டக்களப்புத் தரப்பினர்தான் அழைக்கப்பட்டிருந்தனர். சத்தியலிங்கம் தொலைபேசி மூலம் அவர்களை அழைத்திருந்தார். கட்சியின் பொதுக் குழு பொதுச் செயலாளரைத் தெரிவு செய்ததன் பின்னர், அதனை மாற்றி மற்றொருவரைத் தெரிவு செய்யவேண்டும் என்று முரண்டு பிடித்துக்கொண்டுநிற்பவர்களுக்குத் தலைமை தாங்குபவர்கள்தான் அழைக்கப்பட்டிருந்தார்கள். அந்த வகையில் மட்டக்களப்பிலிருந்து சிறீநேசன், அரியநேந்திரன் ஆகியோரும் அம்பாறையில் இருந்து கோடீஸ்வரனும் அழைக்கப்பட்டிருந்தனர். இவர்களுடன் ஏற்கனவே பொதுச் சபையால் பொதுச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டவரான திருகோணமலையைச் சேர்ந்தவரான குகதாசனும் அழைக்கப்பட்டிருந்தார்.

கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருப்பவரான சிறீதரன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியோரும் கூட்டத்தில் இருந்தனர். பதவி விலகிச் செல்லும் தலைவரான மாவை சேனாதிராசா கூட்டத்திற்கு வரவில்லை. அவர் தனது மகனின் திருமணத்தை முடித்துக்கொண்டு பலாலி விமான நிலையம் ஊடாக சனிக்கிழமையே திரும்பிவிட்டார் என்றுபோதும் கூட்டத்தில் அவர் இல்லை. அதேபோன்று இந்தப் பிரச்சினைகளின் அடிநாதமாக, மையமாக இருப்பவரான சுமந்திரனும் கூட்டத்திற்கு அழைக்கப்படவில்லை. இப்படி ஒரு கூட்டம் நடத்தப்பட இருப்பதாக மருத்துவர் சத்தியலிங்கம் சுமந்திரனுக்கு காதில் போட்டு வைத்தார் என்பதைத் தவிர, அது நடப்பது தொடர்பில் எந்தவித உத்தியோகபூர்வத் தகவலும் அவருக்கு வழங்கப்படவில்லை.

நேற்றைய கூட்டத்தில் நான் முன்னரே சொன்னதைப் போன்று பொதுச் செயலாளர் பதவிக்கு போட்டிபோடமாட்டேன் என்று வாக்குறுதியளித்துவிட்ட இப்போது அதை மீறி செயலாளர் பதவி வேண்டும் என்று கேட்கும் சிறீநேசனும் பொதுச் சபையால் தெரிவு செய்யப்பட்ட குகதாசனும் ஒவ்வொரு வருடத்திற்கு செயலாளர் பதவியை வகிப்பதென இணக்கம் காணப்பட்டது. இந்தப் பிரச்சினையைத் எப்படியும் விரைவில் தீர்க்க வேண்டும் என்று சிறீதரனும் சார்ள்ஸ் நிர்மலநாதனும் அழுத்தம் கொடுத்ததை அடுத்-தும் சிறீதரன் ஏற்கனவே மட்டகளப்புக்குச்சென்று அவர்களுடன் பேசியிருந்ததன் அடிப்படையிலும் இரு தரப்பினரும் ஒருவழியாக இந்த இணக்கத்துக்கு உடன்பட்டனர் .ஆனால், அந்தப் பதவியை முதலில் யார் வகிப்பது என்பதில் இணக்கம் எதுவும் எட்டப்படவில்லை. இன்னும் இரு நாட்கள் எடுத்துக்கொண்டு இரு தரப்பினரும் பேசி ஒரு முடிவுக்கு வரம்படி நேற்றைய கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பில் இரு தரப்பினருக்கும் இடையில் எட்டப்படும் எந்தவொரு முடிவையும் தான் ஏற்றுக்கொள்வார் என்று சிறீதரன் அங்கு வாக்குறுதியளித்தார்.

பொதுச் சபையால் ஏற்கனவே தான் பொதுச்செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டதன் அடிப்படையில் தானே முதலில் பதவி வகிக்க வேண்டும் என்று குகதாசன் தனது பக்க நியாயங்களை அங்கு வலியுறுத்தியிருக்கிறார். பதவிக் காலத்தை விட்டுக்கொடுப்பதில் பிரச்சினையில்லை ஆனால், பொதுச் சபை தெரிவு செய்தது என்ற அடிப்படையில் தான் பதவி ஏற்காது விட்டால் பதவியிலிருந்து விலகியதாகப் பொருள்படும் என்கிற சட்டச் சிக்கலையும் அவர் அங்கு விளக்கினார். ஆனால், சிறீநேசன் முதலில் பதவி வகிக்கவில்லை என்றால், அவரே பொதுச் செயலாளராக வேண்டும் என்று குரல் கொடுக்கும் பொதுச் சபையின் கிழக்கு மாகாண உறுப்பினர்கள் அதனை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்றும் அவர்களுடன் பேசிய பின்னரே அது தொடர்பில் தமது முடிவைத் தெரிவிக்க முடியும் என்றும் சிறீநேசன், அரியநேந்திரன், கோடீஸ்வரன் ஆகியோர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்தே அவர்கள் பேசி ஒரு முடிவுக்கு வருவதற்கு அவகாசம் வழங்கப்பட்டது. இந்த ஆளுக்கு ஒரு வருட திட்டத்தின் நம்பகத் தன்மையை உறுதிப்படுத்தும் விதத்தில் இரு தரப்பினருக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொள்வது என்றும் நேற்று முடிவு செய்திருக்கிறார்கள்.

ஆனாலும். இந்த ஆளுக்கு ஒரு வருடம் என்கிற ஏற்பாடு வெளிப்படையாகப் பார்த்தால் ஒரு சமரச முயற்சியாகத் தெரிந்தாலும், அதனுள்ளேயும் சட்டச் சிக்கல்கள் புதைந்துள்ளன. கட்சியின் யாப்புப்படி பொதுச் செயலாளர் ஒருவர் பதவி விலகினால் பொதுச்சபையே அடுத்த பொதுச் செயலாளரைத் தெரிவு செய்யமுடியும். அதனால்தான் மாவையரின் பதவிக் காலத்தில் கிழக்கைச் சேர்ந்தவரான பரராஜசிங்கம் பொதுச் செயலாளர் பதவியிலிருந்து விலகிய பின்னர் பதில் பொதுச் செயலாளர்களில் ஒருவரான மருத்துவர் சத்தியலிங்கம் செயலாளர் கடமையை ஆற்றினார். 2024 ஜனவரி 21இல் அடுத்த பொதுச் சபை கூடும் வரைக்கும் அவரே பொதுச் செயலாளராகக் கடமையில் இருந்தார்.

இப்போது, ஆளுக்கு ஒ-ரு வருடத் திட்டத்தின் கீழ் முதலாவது பதவிக் காலத்தை சிறீநேசனுக்கு விட்டுக் கொடுப்பதாயின் குகதாசன் பதவி விலகவேண்டும். அப்படி அவர் பதவி விலகினால் அடுத்த பொதுச் சபைக் கூட்டத்தைக் கூட்டும் வரையில் செயலாளர் பதவியை கடந்த பொதுச் சபைக் கூட்டத்தில் பதில் பொதுச்செயலாளர் என்று தீர்மானிக்கப்பட்டவரான குலநாயகமே ஏற்கவேண்டும். அதன் பின்னர் குலநாயகத்தால் அழைப்பு விடுக்கப்படும் பொதுக் கூட்டத்தில் புதிய செயலாளரை தெரிவு செய்யவேண்டும்.

குகதாசன் -முதலில் பதவி வகித்தால் இந்தப் பிரச்சினை வராது. ஆனால், ஒரு வருடத்தின் பின்னர் அவர் பதவி விலகி சிறீநேசனுக்கு பதவியை வழங்குவதாக இருந்தால் அப்போதும் இதே நடைமுறையைத்தான் பின்பற்றியாகவேண்டும். பதில் பொதுச் செயலாளராகக் குலநாயகம் பதவி வகிக்காமல் மற்றொரு செயலாளரைத் தெரிவு செய்யமுடியாது.

இதற்கிடையில் கட்சியின் புதிய தலைவர் மற்றும் நிர்வாகிகள் தெரிவு நடந்து ஒரு மாத காலத்திற்குள் அந்த விவரங்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்படவேண்டும் என்று சட்டம் சொல்கின்றது. தமிழ் அரசுக் கட்சியைப்பொ-றுத்தவரையில் அந்த ஒரு மாதம் முடிவதற்கு இன்னும் 9 நாட்கள்தான் இருக்கின்றன. அப்படி ஒரு மாத காலத்திற்குள் கட்சியின் புதிய நிர்வாகிகள் தொடர்பாகத் தேர்தல்கள் திணைக்களத்திற்கு அறிவிக்கப்படவில்லை என்றால் அந்தக் கட்சியின் பதிவை நீக்கவேண்டும் என்கிறது சட்டம்.

ஆக மொத்தத்தில், இன்னும் 9 நாட்களிற்குள் குகதாசன் பதவிவிலகி, பொதுச் சபையைக் கூட்டி மீண்டும் ஒரு பொதுச் செயலாளரைத் தெரிவு செய்வது எல்லாம் நடக்கக்கூடிய காரியமாகத் தெரியவில்லை. அதுவும்போக, குகதாசன் பதவிவிலகி மீண்டும் பொதுச்சபைகூட்டப்பட்டால் அப்போது சிறீநேசன்தான் அடுத்த பொதுச் செயலாளராக சபையால் தெரிவுசெய்யப்படுவார் என்பதற்கும் உத்தரவாதம் எதுவும் கிடையாது. கடந்த பொதுச்சபையில் அவர் முதலில் ஒன்றும் பின்னர் ஒன்றுமாகக் கூறி புதிய தலைவரின் காலை வாரியது போன்று அடுத்த பொதுச் சபையில் எதிர்த் தரப்பினரும் சிறீநேசனைத் தெரிவு செய்ய சம்மதம் என்று கூ-றி பொதுச் சபையைக் கூட்டிவிட்டு அங்கு வைத்து வேறு ஒருவரின் பெயரை முன்மொழிந்து அவரைப் பொதுச்செயலாளர் ஆக்கமாட்டார்கள் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

எனவே இந்தச் சிக்கல் இப்போதைக்குத் தீரும்போல் இல்லை.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## காமினியை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல்வாதிகள், பதில் பொலிஸ் மாஅதிபர்.தேசபந்து தென்னகோன் உள்ளிட்டோர் இந்த நிகழ்வில் இணைந்து கொண்டனர்.

## நிறைவேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருத்துக் கணிப்பொன்று பெறப்பட்டு ஜனாதிபதி முறைமை நீக்கப்படவுள்ளதாகதகவல் உள்ளது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையைநீக்குவதாகஇருந்தால் மக்கள் கருத்துக்கணிப்புக்குச் செல்ல வேண்டும். அவ்வாறு மக்கள் கருத்துக் கணிப்புக்கச் செல்வார்களாக இருந்தால் சிறீ லங்கா சுதந்திரக்கட்சி ஒரு கையை அல்ல இரண்டு கைகளையும் உயர்த்தி ஆதரவளிக்கும் என்பதை தெளிவாக கூறுகின்றேன்.

எம்மைப் பொறுத்தவரையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையைஇல்லாதொழிப்பதற்கு மட்டுமே நாம் ஆதரவு ஆகும். ஆனால் அதில் அரசமைப்பின் வேறெந்த பகுதிகளைத் திருத்துவது தொடர்பாகவும் சேர்த்துக் கொள்வார்களோ தெரியவில்லை என்றார்.

## மின்சாரக் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் தெரிவித்ததாவது:

இலங்கைமின்சாரசபையானது ஜனவரி முதல் மின்சாரக் கட்டணத்தை குறைப்பதாகக் கூறியிருந்தது. கடந்தவருடம்மட்டும் அந்தச் சபை 47மில்லியன் ரூபாய் இலாபம் ஈட்டியுள்ளது.

இந்த நிலையில் இலங்கை மின்சார சபைச் சட்டமானது திருத்தப்படுகின்றது. இதற்கு காரணம், அதனைத் தனியார் மயப்படுத்துவதாகும். எவ்வாறாயினும், மின்சார சபைக்கு கிடைத்துள்ள வருமானங்களின் பிரகாரம் எதிர்வரும் மார்ச் மாதம் 35 சதவீதமான மின்சாரக் கட்டணக்குறைப்பைச் செய்ய வேண்டும்.

இலங்கை மின்சார சபையானது நட்டத்தில் செயற்படும் ஒரு கட்டமைப்பாக காண்பிக்கப்படுகின்றதே தவிரவும் உண்மையில் எந்தவிதமான நட்டங்களும் அங்கு ஏற்படவில்லை என்றார்.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# ‘34 நாள்கள் நீந்திக் கடந்த நெருப்பாறு’ நாவல் கிளிசொச்சியில் வெளியீடு!







தமிழ்த்தேசியக் கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் மூத்த எழுத்தாளர் நா.யோகேந்திரநாதனின் 34 நாள்கள் நீந்திக்கடந்த நெருப்பாறு என்ற நாவல் வெளியீட்டு நிகழ்வு சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

எழுத்தாளர் தீபச்செல்வன் தலைமையில் நடைபெற்ற குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் ,சிறப்பு விருந்தினராக மகாதேவா ஆச்சிரம தலைவர் சி.மோகனபவன் உள்ளிட்ட எழுத்தாளர்கள், பொது அமைப்பு சார்ந்தோர் எனப் பலர் கலந்துகொண்டனர்.

(05)

# அதிகூடிய விலையில் பொருகளை விற்ற கிளி. வர்த்தகர்கள் 18 பேருக்கு அபராதம்

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த ஜனவரி மாதத்தில் அதி கூடிய விலைகளில் பொருள்களை விற்பனை செய்தமை விற்பனைக்காகக் காட்சிப்படுத்தியமை காலாவதியான பொருள்களை விற்பனை செய்தமை விலை மாற்றம் செய்து விற்பனை செய்தமை என பல்வேறு குற்றச்சாட்டுகளிலும் கைது செய்யப்பட்ட 18 பேருக்கு எதிராக ஒரு லட்சத்து 69 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது

கிளிநொச்சி மாவட்டத்தின் பல பகுதிகளிலும் கடந்த ஜனவரி மாதம் நுகர்வோர் அபிவிருத்தி அதிகார சபையால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போது அதிகூடிய விலைகளில் அரிசி உள்ளிட்ட பொருள்களை விற்பனை செய்ததுடன் காலாவதியான பொருள்களை விற்பனைக்காக காட்சிப்படுத்தியமை மற்றும் பொருள்களின் விலைகளை மாற்றம் செய்து விற்பனை செய்தமை விலை காட்சிப்படுத்தப்படாமல் பொருள்களை விற்பனை செய்தமை என பல்வேறு குற்றச்சாட்டுகளில் 18 பேருக்கு எதிராக வழக்கு பதிவு செய்து கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நிதீமன்ற நீதிவான் பி.ஆர்.ஐ. ஜெமில் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டதையடுத்து

தலா பத்தாயிரம் ரூபா ஐயாயிரம் ரூபா என ஒரு லட்சத்து 69 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

(05-113)

# தென்னிந்திய கலைஞர்களுக்கும் எமது மக்களுக்கும் ஏமாற்றமாம்

## வருத்தமளிக்கிறது என்கிறார் அமைச்சர் டக்ளஸ்

தென்னிந்திய பாடகர் ஹரிஹரன் பங்கேற்பில் இசைக் கலைஞர்கள் கலந்துகொண்ட இசை நிகழ்ச்சியில் இடம்பெற்ற விரும்பத்தகாத சம்பவங்கள் வருத்தமளிப்பதாக தெரிவித்துள்ள கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இவ்வாறான சம்பவங்கள் எமது மக்களை தொடர்ந்தும் துன்பத்தில் ஆழ்த்தி குளிர்காய விரும்பும் சுயநலத் தரப்புக்களுக்கு வாய்ப்பாக மாறிவிடும் எனவும் கூறியுள்ளார். யாழ்ப்பாணம் முற்றவெளியில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற தென்னிந்திய திரைப் பிரபலங்கள் கலந்துகொண்ட நிகழ்ச்சியில் ஏற்பட்ட குழப்பங்கள் தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவரால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் -

இவ்வாறான சம்பவங்கள் எமது பிரதேசங்களில் இடம்பெறுவது வேதனையளிக்கிறது. எமது மக்களின் வாழ்வாதாரத்தையும் வாழ்வியலையும் அடுத்த கட்டத்துக்கு முன்னேற்றுவதற்கு எமது புலம்பெயர் உறவுகளின் முதலீடுகளை நாங்கள் எதிர்பார்த்திருக்கின்ற வேளையில், புலம்பெயர் முதலீட்டாளர் ஒருவரின் முயற்சியில் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு நிகழ்வில், இவ்வாறான அசௌகரியங்கள் ஏற்படுவது, மக்கள் நலன் சார்ந்த எமது எதிர்பார்ப்புக்களுக்கு பின்னடைவுகளையே ஏற்படுத்தும்.

எமது மக்களைத் தொடர்ந்தும் அவலங்களுக்குள் அழுத்தி வைத்திருந்து, அதன் மூலம் அரசியல் இலாபமீட்ட முனைகின்ற சுயலாப தரப்புக்கள், எமது பிரதேசங்களில் முதலீடுகளுக்கு உத்தரவாதம் இல்லை என்ற கருத்தைப் பரப்புவதில் கண்ணுங்கருத்துமாக செயற்பட்டு வருகின்றனர்.

அவ்வாறானவர்களின் கருத்துக்களை வலுப்படுத்துவதாக இவ்வாறான சம்பவங்கள் அமைந்துவிடும். கிடைக்கின்ற தகவல்களின் அடிப்படையில் பார்க்கின்றபோது, ஏற்பாட்டாளர்களின் எதிர்பார்ப்புக்கும் அதிகமான மக்கள் வருகை தந்தமையும், ஒழுங்குபடுத்தலில் இருந்த குறைபாடுகள் சிலவுமே இந்த விரும்பத்தகாத சம்பவத்துக்கு காரணங்களாக அமைந்துள்ளன.

இந்தச் சம்பவம் இசை நிகழச்சியைக் கண்டுகளிக்கும் எதிர்பார்ப்புடன் காத்திருந்த எமது மக்களுக்கும், ஆர்வத்துடன் வருகைதந்த தென்னிந்திய கலைஞர்களுக்கும் அதேபோல் ஏற்பாட்டாளர்களுக்கும் ஏமாற்றத்தை அளித்திருக்கிறது. இவ்வாறு பாதிக்கப்பட்ட அனைவருக்கும் எனது வருத்தத்தினை தெரிவித்துக்கொள்வதுடன், எதிர்காலத்தில் இவ்வாறான நிகழ்வுகளை ஏற்பாடு செய்கின்றபோது, தேவையான முன்னேற்பாடுகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளை சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் கலந்துரையாடி செய்வதை ஏற்பாட்டாளர்கள் உறுதிப்படுத்த வேண்டும் என்பதையும் வலியுறுத்த விரும்புகின்றேன். - என்று தெரிவித்துள்ளார்.

(05)

# பிரதேச கலைஞர் கௌரவிப்பு விழா







தம்பலகாமம் பிரதேச செயலகத்துக்குப்பட்ட பிரதேச கலைஞர்கள் கௌரவிப்பு விழா தி/ஆதிகோனேஸ்வரா மகா வித்தியாலயத்தில் சனிக்கிழமை இடம் பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெயகௌரி ஸ்ரீபதி தலைமையில் இடம் பெற்ற குறித்த நிகழ்வை இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் பிரதேச செயலகம் இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

குறித்த கலைஞர்கள் கௌரவிப்பில் ஊடகம், கலை, எழுத்து துறை என சுமார் 117 கலைஞர்கள் இதன் போது கௌரவிக்கப்பட்டார்கள்.

இதில் பிரதம அதிதியாக திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாராச்சி கலந்து சிறப்பித்தார். அறநெறி பாடசாலை மாணவ மாணவர்களின் கலை கலாசார நிகழ்வுகளும் இதன் போது மேடை ஏற்றப்பட்டன.

இதில் தவத்திரு அடிகளார் குருமகா சந்நிதானம் தென்கயிலை ஆதினம், முன்னாள் மாகாண உதவி காணி ஆணையாளர் க. ரவிராஜன், உதவி பிரதேச செயலாளர் இரா.பிரசாந்தன், பிரதேச செயலக உத்தியோ கத்தர்கள் உட்பட கலைஞர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

(05)

# தலைக்கவசத்தினுள் ஐஸ் போதை மறைத்து வைத்திருந்தவர் கைது

## மன்னாரில் சம்பவம்

மன்னாரில் சூட்சுமமான முறையில் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்ட நபரை குற்றத்தடுப்பு புலனாய்வுப் பிரிவினர் வெள்ளிக்கிழமை மாலை கைது செய்துள்ளனர்.

மன்னார் மாவட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையிலேயே குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மன்னார், சாவட்காடு புனித அந்தோனியார் ஆலய பகுதியில், தலைக்கவசம் அணிந்திருந்த நபரை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் பரிசோதித்தபோது தலைக்கவசத்துக்குள் ஐஸ் போதைப்பொருள் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை தெரியவந்துள்ளது.

கைதானவரிடமிருந்து 20 கிராம் 850 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த சந்தேக நபர் மன்னார் விடத்தல் தீவை பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்டவர் ஆவார்.

குறித்த நபர் போதைப்பொருளை வியாபாரத்துக்காக விடத்தல் தீவிலிருந்து மன்னாருக்கு கொண்டுசென்றதாக ஆரம்பகட்ட விசாரணையூடாக தெரியவந்துள்ளது.

(05)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தேர்தல் நடக்குமா?

அரசுத் தலைவர் தேர்தலும் அதைத் தொடர்ந்து நாடாளுமன்றத் தேர்தலும் நடத்தப்படும் என்று ரணில் விக்கிரமசிங்க ஆஸ்திரேலியாவில் வைத்துத் தெரிவித்திருக்கிறார். அரசமைப்பின்படி இந்த வருடத்தில் அரசுத் தலைவர் தேர்தல் நடத்தப்படவேண்டும். ஐப்பசி மாதத்திற்கு முன்னதாக அது நடக்கவேண்டும். அதன் பின்னர் அதிகாரத்தைக் கைப்பற்றுபவர் ரணிலாக அன்றி வேறொருவராக இருந்தாரானால் அவர் உடனடியாக நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு அதற்கும் தேர்தல் நடத்துவதற்கான வாய்ப்புக்கள் உண்டு.

அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆஸ்திரேலியாவில் மட்டுமல்ல, நாடாளுமன்றத்திலும் இந்த ஆண்டு தேர்தல் ஆண்டு என்று அறிவித்திருந்தார். இருந்தாலும் அவர் கூறுவது போன்று அரசுத் தலைவர் தேர்தலும் சரி நாடாளுமன்றத் தேர்தலும் சரி நடக்குமா என்கிற பெரும் சந்தேகம் கேள்வி எல்லாம் தற்போதே எழுந்துள்ளன. நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், அரசுத் தலைவரின் கொள்கை விளக்க உரை மீதான விவாதத்தில் பேசும்போது இதனைச் சுட்டிக்காட்டியிருந்தார். ரணில் வெளியே ஒன்றைப் பேசுவார், ஆனால் உள்ளே என்ன நினைக்கிறார் என்பது தெரியாது என்று அவர் சுட்டிக்காட்டியிருந்தார். உள்ளூராட்சிசபைத்தேர்தலின்போதும்அதுவேநடந்தது. கடைசி நாட்கள் வரை தேர்தல் நடக்கும் என்று நாடே நம்பியிருந்தபோது தனது புத்திசாதுரியத்தால் அதனை தான் நினைத்ததைப் போன்றே தடுத்து நிறுத்தினார் ரணில். சட்டப்படி அந்தத் தேர்தலை நிறுத்த முடியாது என்று நடே நம்பியிருந்தபோது அதிகாரத்தை எப்படித் தனக்கேற்ப வளைத்து வியாக்கியானப்படுத்த முடியும் என்பதை நிரூபித்துக் காட்டினார் ரணில்.

அரசுத் தலைவர் தேர்தலிலும் அதுபோன்று நடக்காது என்று எப்படி உறுதியளிக்க முடியும் என்பதே இப்போது எழுந்துள்ள சந்தேகங்கள், கேள்விகளுக்கான காரணம். நிறைவேற்று அதிகார அரசுத் தலைவர் முறைமையை ஒழிப்பது, அதற்காக மக்கள் கருத்துக் கணிப்பு ஒன்றை நடத்துவது ஆகியன குறித்து இப்போது பேசப்படுவதன் பின்னணியில் இந்தச் சந்தேகங்கள் கேள்விகள் வலுக்கின்றன. ரணில் நிறைவேற்று அதிகார அரசுத் தலைவர் முறையை ஒழிப்பது தொடர்பான அரசமைப்புத் திருத்தத்தில், அந்த மாற்றம் நிகழும் வரைக்குமாக இன்னுமொரு பதவிக் காலத்திற்கு தற்போதைய அரசுத் தலைவர் பதவியை நீடிக்கும் வழி வகை செய்யக்கூடும் என்கிற அச்சமே சந்தேகங்களைப் பெருப்பிக்கின்றது.

அது மட்டுமல்ல ஆஸ்திரேலியாவில் இந்திய ஊடகம் ஒன்றுக்குவழங்கிநேர்காணலில்அடுத்தஅரசுத்தலைவர் தேர்தலில் போட்டியிடுவாரா இல்லையா என்பதைப் பற்றி ரணில் தெளிவான பதில் எதனையும் வழங்கவில்லை. என்றால் தேர்தலில் போட்டியிடுவது குறித்து அவர் இன்னும் தீர்க்கமான முடிவு எடுக்கவில்லை என்பது தெளிவு. அப்படி தேர்தலில் போட்டியிடும் –முடிவை அவர் எ–டுக்கவில்லை என்றால், அதிகாரத்தை வேறு வழிகளில் தக்க வைக்க அவர் முயல்வார் என்கிற சந்தேகம் எழுவது நியாயமானதே.

தற்போதிருக்கும் நிலையில் ராஜபக்சக்களும் தமது பாதுகாப்புக் கருதி ரணிலின் அந்த முயற்சிக்கு ஆதரவளிப்பார்கள் என்கிற எதிர்பார்ப்பு உண்டு. அதன் காரணமாகவே அரசுத் தலைவர் தேர்தலை ஒத்திப்போடும் முயற்சிகள் நடக்கின்றன என்கிற குற்றச்சாட்டுக்கள் எழுகின்றன. ரணிலைத் தாண்டி இந்த விடயத்தை கையாள்வதற்கும் தேர்தல்களை நடத்த வைப்பதற்கும் எதிர்க் கட்சிகளுக்குச் சக்தி இருக்கின்றதா என்பதே இங்கு எழும் மற்றைய கேள்வி.












# இது உலக தேர்தல் ஆண்டு

## 40க்கும் மேற்பட்ட நாடுகளில் திருவிழா

ஐங்கரன் விக்கினேஸ்வரா




2024ஆம் ஆண்டு உலகளாவிய தேர்தல் ஆண்டாக மாறியிருக்கின்றது, இந்த ஆண்டு உலகம் முழுவதும் 40க்கும் மேற்பட்ட முக்கிய தேர்தல்கள் நடைபெறவுள்ளன. 2024இல் தேர்தல் நடைபெறும் நாடுகளில் உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடுகளான அமெரிக்கா, இந்தியா மற்றும் இந்தோனேசியா ஆகியனவும் அடக்கம்.

இங்கிலாந்து, தென்னாப்பிரிக்கா, ரஷ்யா, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளிலும் தேர்தல் நடைபெற உள்ளன. இந்தத் தேர்தல்களில் வாக்களிக்கப் போகும் வாக்காளர்களின் எண்ணிக்கை 4 பில்லியனுக்கும் அதிகமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் உலக மக்கள் தொகையில் கிட்டத்தட்ட பாதி பேர் இந்த ஆண்டு தேர்தலில் வாக்களிக்க உள்ளனர்.

### ஜனவரி தேர்தல்:

தாய்வானில் ஜனவரி 13 நடைபெற்ற அதிபர் தேர்தல், இந்த ஆண்டில் நடைபெற்ற முதல் தேர்தல் ஆகும். தாய்வானில் ஜனநாயக முற்போக்கு கட்சி (DPP) இந்தத் தேர்தலில் மீண்டும் வெற்றி பெற்றது. வில்லியம் சாய் ஜனாதிபதியாகப் பதவியேற்றார்.

மீண்டும் ஒன்றிணைவதற்கான பெய்ஜிங்கின் முன்மொழியப்பட்ட 'ஒரு நாடு, இரண்டு அமைப்புகள்' மாதிரி உட்பட, 'ஒரு சீனா' கொள்கையை ஜனநாயக முற்போக்குக் கட்சி உறுதியாக எதிர்க்கிறது.



வங்கதேசம், இந்தியா, இந்தோனேசியா, பாகிஸ்தான், ரஷ்யா, மெக்சிகோ மற்றும் அமெரிக்கா ஆகிய அதிக மக்கள் தொகை கொண்ட 10 நாடுகள் உட்பட 76 நாடுகள் இந்த ஆண்டில் தேர்தலுக்குச் செல்கின்றன. வரலாற்றில் இது மிகப்பெரிய தேர்தல் ஆண்டாகும்.

வங்கதேசத்தில் ஷேக் ஹசீனா ஐந்தாவது முறையாகப் பிரதமராக வெற்றி பெற்றார். வங்காளதேசத்தில் ஜனவரி 7 தேர்தல் நடைபெற்றது.

பெப்ரவரியில் இந்தோனேசியா, பாகிஸ்தான் மற்றும் பெலாரஸ் ஆகிய நாடுகள் தேர்தலுக்குச் செல்கின்றன. இந்தோனேசிய குடிமக்கள் ஜனாதிபதி ஜோகோ விடோடோவின் வாரிசைத் தேர்ந்தெடுக்க வாய்ப்புக்கள் உண்டு.

தொடக்கக் கருத்துக் கணிப்புகள் வலதுசாரி தேசியவாதியான பிரபோவோ சுபியாண்டோவிற்கும் ஆளும் கட்சியின் வேட்பாளர் கஞ்சர் பிரனோவோவிற்கும் இடையே போட்டி இருப்பதாகக் காட்டுகின்றன.

கிழக்கு ஐரோப்பாவில் பெலாரஸ் 2020ஆம் ஆண்டு மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு எதிரான போராட்டங்களை ஆளும் தரப்பு நசுக்கிய பின்னர் அதன் முதல் நாடாளுமன்றத் தேர்தலை நடத்தவுள்ளது.

மார்ச் மாதம் ரஷ்யா, உக்ரைன் ஆகிய நாடுகளும் தேர்தலுக்கு செல்கின்றன. உலகின் மிக அதிக கவனத்தை ஈர்க்கும் நாடுகளில் ஒன்றான ரஷ்யா, எந்த ஆட்சி மாற்றத்தையும் காணாது.

உக்ரைன் தற்போது இராணுவச் சட்டத்தின் கீழ் உள்ளது, இது தேர்தல்களைத் தடை செய்கிறது, ஆனால் ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி, நாடு ஜனநாயகமாக இருக்க உறுதிபூண்டிருப்பதைக் காட்ட, எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தேர்தலை நடத்துவது குறித்து பரிசீலித்ததாகக் கூறப்படுகிறது. இருந்தாலும் அங்கு தேர்தல் நடக்குமா என்பது உறுதியாகத் தெரியவரவில்லை.

### ஏப்ரலில் இந்திய தேர்தல்:

இந்தியாவுக்கு மிக முக்கிய ஆண்டாக இந்த ஆண்டு பார்க்கப்படுகிறது. இந்தியாவில் லோக்சபா தேர்தல் நடைபெற உள்ளது. மத்தியில் ஆட்சியில் இருக்கும் பிரதமர் மோடி தலைமையிலான பாஜக அரசு மீண்டும் ஆட்சியை பிடித்து வெற்றியை பதிவு செய்ய முனைப்பு காட்டி வருகிறது.

சுமார் 1.5 பில்லியன் மக்கள் தொகை கொண்டது இந்தியா. அதில் 600 மில்லியன் மக்கள் வாக்களிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த ஆண்டு ஏப்ரல் முதல் அதன் பொதுத் தேர்தல்கள் நடைபெறும்.

நாட்டின் தற்போதைய பிரதமர், நரேந்திர மோடி மற்றும் அவரது , பாரதிய ஜனதா கட்சி (BJP), தங்கள் மூன்றாவது ஐந்தாண்டு பதவிக் காலத்திற்காக மீண்டும் கடும் பரப்புரையில் ஈடுபட்டுள்ளனர்.

பாஜகவை வீழ்த்த வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் நாடு முழுவதும் எதிர்க்கட்சிகள் ஓரணியில் திரண்டுள்ளன. எதிர்க் கட்சிகளின் இந்த இந்தியா கூட்டணியில் காங்கிரஸ், திமுக, உள்பட 28 கட்சிகள் இடம்பெற்றுள்ளன. நாடு முழுவதும் உள்ள மக்களவைத் தொகுதிகளில்

(5ஆம் பக்கத் தொடர்ச்சி...)

# அனுமதியின்றி மணல் ஏற்றிச்சென்ற வாகனத்தைக் மடக்கிய பொலிஸார்



சட்டவிரோதமாக டிப்பர் வாகனத்தில் மணல் ஏற்றிச் சென்ற குற்றச்சாட்டில் டிப்பர் வாகன சாரதியை முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பொலிஸார் கைது செய்ததோடு, இரண்டு டிப்பர் வாகனங்களையும் கைப்பற்றியுள்ளனர்.

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பகுதியில் வெள்ளிக்கிழமை பொலிஸார் டிப்பர் வாகனங்களை வழிமறித்து சோதனையிட்டபோதே அவ்வாகனத்தில் சட்ட விரோதமாக கிரவல் மணல் ஏற்றிச் சென்றமை தெரியவந்துள்ளது.

இரண்டு டிப்பர் வாகனத்தினதும் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், டிப்பர் வாகனத்தையும் பொலிஸார் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்றனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் கைது செய்யப்பட்ட நபர்களையும், வாகனத்தையும் நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (05)

# போதையில் வாகனம் செலுத்திய 4 பேர் கிளிநொச்சியில் சிக்கினர்

கிளிநொச்சி பல பகுதிகளிலும் மது போதையில் வாகனம் செலுத்திய நான்கு பேருக்க ஒரு லட்சத்து எண்பத்துஐயாயிரம் ரூபா தண்டப்பணம் வித்க்கப்பட்டதுடன் சாரதி அனுமதி பத்திரங்களும் ஒரு மாத காலத்திற்கு இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குப்பட்ட பகுதியில் வரி பத்திரம், காப்புறுதி பத்திரம், சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி மதுபோதையில் வாகனம் செலுத்திய ஒருவரை கைது செய்து அவருக்க எதிராக வழக்கு பதிவு செய்த கிளிநொச்சி பொலிஸார் குறித்த நபரை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியிருந்தனர். இந்நிலையில் குறித்த குற்றச்சாட்டுக்களுக்கு 80 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று சாரதி அனுமதிப்பத்திரம் இன்றியும் மது போதையில் வாகனம் செலுத்தியவருக்க 55 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை மதுபோதையில் வாகனம் செலுத்திய இரண்டு பேருக்க தலா 25,000 ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களது சாரதி அனுமதி பத்திரங்களும் ஒரு மாத காலத்துக்கு இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

மேற்படி குற்றச்சாட்டுகளுடன் தொடர்பட்டவர்கள் வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்ற நீதிவான் பி.ஆர்.ஐ ஜெமில் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்ட போது இவ்வாறு தண்டப்பணங்கள் விதிக்கப்பட்டு சாரதி அனுமதிப்பத்திரங்களும் இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. (05-113)

# இது உலக....

(4ஆம் பக்கத் தொடர்ச்சி..)

கூட்டணி அமைத்து போட்டியிட இந்திய கூட்டணி கட்சிகள் திட்டமிட்டுள்ளன.

இது தொடர்பான தொகுதிப் பங்கீடு பேச்சுக்களில் கூட்டணிக் கட்சிகள் தீவிரமாக உள்ளன. இதனால், தேர்தல் திருவிழா இப்போதே தொடங்கிவிட்டது என்று சொல்லும் அளவுக்கு அரசியல் களம் அனல் பறக்கத் தொடங்கிவிட்டது.

இந்தியாவில் மட்டும் இல்லை, உலகம் முழுவதும் பல நாடுகளில் இந்த ஆண்டு தேர்தல் நடைபெற உள்ளது. 2023 டிசெம்பரில், பாஜக மூன்று பெரிய மாநிலத் தேர்தல்களை நடத்தியது. மேலும் மோடி “ஹாட்ரிக் 2024 வெற்றிக்கு உத்தரவாதம்” என்று கூறினார்.

ஜூனில் ஆஸ்திரியா, பெல்ஜியம், டென்மார்க், ஜெர்மனி, கிரீஸ், இத்தாலி, அயர்லாந்து மற்றும் ஐஸ்லாந்து போன்றவற்றுடன் பெரும்பாலான ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் தேர்தலுக்குச் செல்கின்றன. இந்த நாடுகள் பலவற்றிலும் வலதுசாரி வேட்பாளர்களின் எழுச்சி பெற்றிருக்கிறார்கள் என்று அறிக்கைகள் கூறுகின்றன. .

கிரீஸில், கடந்த ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் அமோக வெற்றி பெற்று, தற்போதைய பிரதமரான புதிய ஜனநாயக கட்சியின் கிரியாகோஸ் மிட்சோடாகிஸ், மீண்டும் தேர்தலுக்குச் செல்கிறார். மெக்சிகோவும் ஜூன் மாதத்தில் வாக்களிக்கும், ஆளும் கட்சி வேட்பாளர் கிளாடியா ஷீன்பாம் தனது முக்கிய போட்டியாளரான ஓழஉாவைட புயடஎநண ஐ விட முன்னேறி உள்ளார். தேர்ந்தெடுக்கப்பட்டால், ஷெயின்பாம் அல்லது கால்வேஸ் மெக்சிகோவின் முதல் பெண் அதிபராவார்.

**நவம்பர் அமெரிக்கா தேர்தல் :**

நவம்பர் 2024 இல் அமெரிக்காவும் தேர்தலுக்குச் செல்லும். தொடக்க கருத்துக் கணிப்புகள் 2020இல் நேருக்கு நேர் சென்ற அதே இருவர் மீண்டும் மற்றொரு சுற்றுக்கு வருவார்கள், டொனால்ட் டிரம்ப் மற்றும் ஜோ பைடன். நியூயார்க் டைம்ஸ் கருத்துப்படி, குடியரசுக் கட்சியில் டிரம்ப் ஆதிக்கம் செலுத்துகிறார். அவருடைய பெரும்பாலான போட்டியாளர்கள் எந்த வாக்குகளும் போடப்படுவதற்கு முன்பே வெளியேறிவிட்டனர். அயோவா காக்கஸ்ஸையும் அவர் சொந்தமாக வைத்திருக்கிறார். ஜோ பைடன் ஜனநாயகக் கட்சியின் முன்னணி வேட்பாளராகத் தொடர்கிறார். முக்கிய தேர்தலில் அமெரிக்காவின், ஜனநாயகம் வாக்குச்சீட்டில் உள்ளது என்று பைடன் கூறினார். 70 க்கும் மேற்பட்ட நாடுகளில் 4 பில்லியன் மக்கள் இந்த ஆண்டு வாக்கெடுப்புக்குச் செல்கிறார்கள். உலகம் முழுவதும் முக்கிய தேர்தல்கள் நடைபெறுகின்றன. 2024 இல் உலகில் பாதி பேர் வாக்களிக்கச் செல்ல உள்ளனர்.





# கிளிநொச்சியில்

# ஐஸ்வர்யம் பெருவிருந்து மண்டபம்

# Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road, Kilinochchi



- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL

## BANQUET MEALS HALL





### FULL OPTION

**MAIN DIHES**

Vegitable Fried Rice with Panner & Ghee - 300/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Roty With Vegitable in Indian Style

**DESSERT**

| | |
|---|---|
| Ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| Ice Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

SPECIAL MENU PACKAGE

**BEVERAGES**

| | |
|---|---|
| JUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swabpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |

காலைக்கதிர் Kalaikkathir

# அரசுக்குக் காணிகளைத் தர விரும்புவோர் உள்ளூராட்சிகளுக்கு தருவதே பாதுகாப்பு

## வலி.கிழக்கு முன்னாள் தவிசாளர் நிரோஷ் எடுத்துரைப்பு



மக்கள் பங்கேற்பு அபிவிருத்தி என்ற எண்ணக்கருவுடன் மக்கள் பங்களிப்பு அபிவிருத்தித் திட்டங்களை வகுத்துச் செயற்படுத்துவதிலும் அரச தாபனங்கள் சிரத்தை எடுக்குமாயின் கிராம மட்ட உட்கட்டுமானங்களை விருத்தி செய்வது இலகுவாக அமையும் என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

நீர்வேலியில் இடம்பெற்ற தமிழ் முற்றம் மற்றும் தபாலகக் கட்டடத் திறப்பு விழாவில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

நீர்வேலி மண் தமிழ் மக்களின் பாரம்பரியத்திற்கு உரிய மண்ணாகும். இந்த மண்ணில் தமிழ் முற்றத்தை அமைக்க வேண்டும் என நான் தவிசாளராகப் பதவி வகித்த காலத்தில் அவை தீர்மானம் உள்ளிட்ட பூர்வாங்க ஏற்பாடுகளை மேற்கொண்டேன். இந்நிலையில் ஏற்கனவே நீர்வேலியில் தபாலகத்திற்கான கட்டடத்தைத் தனது கொடையாக அமைத்து வழங்குவதற்கான செயற்றிட்டத்தினை ஆரம்பித்திருந்த தொழிலதிபர் கிருபாகரன் அவர்கள் தமிழ் முற்றத்தினை அமைத்து அதில் பெரியார்களின் சிலைகளை நிறுவும் பொறுப்பினையும் தானே முன்வந்து ஏற்றுக் கொண்டு அதனை தற்போது அவர் முழுமையாகச் செயற்படுத்தியுள்ளார். அவரது முற்போக்கான கொடை எண்ணத்திற்கும் செயற்பாட்டுக்கும் பாராட்டுக்கள்.

இதற்காக அவருடன் உழைத்த ஓய்வுநிலை கல்விப் பணிப்பாளர் இ.குணநாதன் தலைமையிலான குழுவினர்க்கு நன்றிகள். இன்றைய கால கட்டத்தில் அரசால் மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்திகள் பல நிதி பற்றாக்குறை மற்றும் அவற்றை செயற்படுத்துவதில் உள்ள செலவீனங்களை ஒழுங்குபடுத்துவதிலும் அவற்றை நிர்வாக ரீதியில் சட்ட திட்டங்களுக்கு உள்ளாக அணுகுவதில் காணப்படும் தாமதங்கள் வாயிலாக விரைவாக ஈடேற்றுவதில் இழுபறிகள் உள்ளன.

இந் நிலையில் மக்களுக்கு வேண்டிய எமது இனத்தின் பண்பாடு கலாசாரம் வரலாறு போன்றவற்றை நிலைநிறுத்தத் தக்க செயற்றிட்டங்களை கொடையாளர்களிடம் கையளித்து அவற்றை மக்கள் மயப்படுத்துவது சிறந்த உத்தியாகும். அரச நிறுவனம் மேற்கோள்ளும் அபிவிருத்தியில் பங்கேற்பு அபிவிருத்தி என்பதற்கு மேலாகச் சென்று மக்களின் பங்களிப்பாக அபிவிருத்தியை முன்கொண்டு செல்வதும் அவசியமாகவுள்ளது. அது தனவந்தர்கள் கொடையாளிகளை கிராம மட்டத்தில் இணைப்பதாக அமையும்.

இதேநேரம் இன்று பலர் அரச தாபனங்களுக்கு தமது சொத்துக்களை நன்கொடை அளிக்க முன்வருகையில், அவ்வாறான சூழ்நிலைகளில் மத்திய அரசாங்கம் சார்ந்த தாபனங்களுக்கு அன்பளிப்பது இன முரன்பாடும் பல்வேறுபட்ட ஆக்கிரமிப்பினையும் எதிர்கொள்ளும் இனம் நாம் என்ற வகையில் சரியான தீர்மானம் இல்லை. மேலும், மத்திய அரசின் தாபனங்கள் கொழும்பு மட்ட முடிவுகளுக்கு கட்டுப்பட்டு செயற்படலாம்.

ஆனால், உள்ளூராட்சி மன்றத்திற்கு நிலங்களை அன்பளித்தால் அதில் எமது மக்கள் பிரதிநிதிகளின் முடிவே செல்வாக்குச் செலுத்தும். மத்திய அரசு சார்ந்த தாபனங்க ளுக்கு காணித் தேவை காணப்படின் அவற்றை உள்ளூராட்சி மன்றங்களுக்கு கையளித்து குறித்த உள்ளூராட்சி மன்றங்கள் மத்திய அரசின் தாபனங்களுக்கு வாடகைக்கு விட முடியும்.

இதன் வாயிலாக எமது நிலம் சார்ந்த இன ரீதியிலான பாதுகாப்பினை நாம் உறுதிப்படுத்த முடியும். இவ்வாறு முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார். (05)


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்

(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்போடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 250,000/-
பரப்பு 25இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd



## உண்மை ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நல்லிணக்கத்திற்கான இடைக்கால செயலகம் பாதிக்கப்பட்ட குழுக்கள், அழுத்தத்திற்கு முகங்கொடுத்த தரப்பினர்கள், மதத் தலைவர்கள், கொள்கை வகுப்பாளர்கள் போன்ற தரப்பினர்களுக்கான ஆலோசனை நிகழ்ச்சிகள் தற்போது நடத்தப்பட்டு வருவதாக இங்கு குறிப்பிடப்பட்டது.

ஏனைய அதிகார எல்லைகளில் உண்மை, நல்லிணக்கம் மற்றும் மறுசீரமைப்புக்கான பொறிமுறைகளின் அடிப்படையில் அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்த அறிக்கை தயாரித்தல் முன்மொழியப்பட்ட சட்டத்தின் கீழ் ஆணையாளர்களின் பரிசீலனைக்கான வழிகாட்டுதல்கள் தயாரித்தல் மற்றும் முனைப்புடன் பணியாற்றுவது தொடர்பில் இங்கு ஆராயப்பட்டது.

உண்மை மற்றும் நல்லிணக்க பொறிமுறைக்கான இடைக்கால செயலகம் 04 பிரிவுகளைக் கொண்டுள்ளதோடு சட்ட விவகாரங்கள், கொள்கை மேம்பாடு, மக்கள் தொடர்புகள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகியவற்றில் நிபுணத்துவம் பெற்ற நபர்களைக் கொண்டுள்ளது.

பாதிக்கப்பட்டவர்களின் குரலுக்கு செவிசாய்ப்பதை உறுதி செய்து பாதிக்கப்பட்டவர்களை மையமாகக் கொண்ட அணுகு முறையைக் கடைப்பிடிக்க வேண்டியதன் அவசியம் உட்பட, நிலைமாறுகால நீதியின் பல்வேறு அம்சங்களைப் பற்றிய வலுவான கருத்துப்பரிமாறலுக்கு இந்த கலந்துரையாடல் வாய்ப்பளித்தது.

தேசிய பாதுகாப்பு தொடர்பான முக்கியமான தகவல்களைக் கையாளுதல், முறையான பதிவு முகாமைத்துவத்திற்கான தேசிய சுவடிகள் திணைக்களத்துடன் ஒத்துழைப்புடன் செயற்படல் மற்றும் நிலைமாறுகால நீதிச் செயல்பாட்டில் புலம்பெயர் தமிழர்களின் ஈடுபாடு போன்ற பிரச்சினைகள் குறித்தும் பங்கேற்பாளர்கள் கருத்து தெரிவித்தனர்.

நிலைமாறுகால நீதிச் செயன்முறைக்கான நம்பிக்கையையும் சட்டப்பூர்வமான தன்மையையும் கட்டியெழுப்புவதற்காக பல்வேறு பங்குதாரர்களிடமிருந்து கருத்துக்களை சேகரிக்க பரந்த மற்றும் வெளிப்படையான ஆலோசனை செயல்முறையை நடத்துவதன் முக்கியத்துவமும் இங்கு வலியுறுத்தப்பட்டது.

உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான சட்டமூம் தொடர்பான சம்பந்தர்பட்ட தரப்பினர்களின் மறுஆய்வு மற்றும் ஆலோசனைக்கு சமர்ப்பிக்க முடியும் எனவும் சமூகத்தின் அனைத்துப் பிரிவினரின் பல்வேறு நலன்கள் மற்றும் முயற்சிகள் உள்வாங்கப்படுவதை உறுதிசெய்ய இந்த அணுகுமுறை பின்பற்றப்படும் என்றும் பங்கேற்பாளர்களுக்கு சுட்டிக்காட்டப்பட்டது.

நல்லிணக்கத்தை நோக்கிய இலங்கையின் பயணத்தில் அனைத்துபிரஜைகளுக்கும்மிகவும் நியாயமானதும் விரிவானதுமான சமூகத்தை கட்டியெழுப்புவதற்காக, இவ்வாறான கருத்தாடல்கள் முக்கியமான படியாக அமையும் என்றும் இங்கு வலியுறுத்தப்பட்டது.

## 225 எம். ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றஉறுப்பினர்களையும் பொதுமக்கள் நிராகரித் துள்ளனர். எனவே அதில் ஒரு அங்கமாக இருக்க நான் விரும்பவில்லை. ஆகவேநாம்எமதுபுதியஅணியுடன் தேர்தலுக்கு முகங்கொடுப்பதற்கே தீர்மானித்துள்ளோம்.

மக்கள் புதிய மாற்றத்தினை எதிர்பார்க்கின்றார்கள். அந்த மாற்றத்துக்கான தலைமையை நாம் வழங்குவதற்கு தயாராகவே உள்ளோம் என்றார்.

தொடர்ச்சி 8ம் பக்கம்....




# இதுவல்ல யாழ்ப்பாணத்தின் அடையாளம்: நடந்ததவறுகளுக்கு உரியவர்கள் பொறுப்பு

## அங்கஜன் காட்டம்



வெள்ளிக்கிழமை நடைபெற்ற இசை நிகழ்ச்சி குறித்து நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் முகநூல் பதிவு ஒன்றை பதிவிட்டுள்ளார்.

அதில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு -

யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் நடைபெற்ற இசைநிகழ்ச்சி தொடர்பாக பலவையான விமர்சனங்களை இலங்கையிலும் இந்தியாவிலும் வெளிநாடுகளில் இருந்தும் அவதானிக்க முடிகிறது.

யாழ்ப்பாணத்தில் இசை நிகழ்ச்சிகள் நடத்தப்படுவதும், அதனூடாக முதலீடுகள் கொண்டுவரப்படுவதும் வரவேற்கப்பட வேண்டியதாக இருந்தாலும், அந்நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யும்போது கவனிக்க வேண்டிய விடயங்களில் நெகிழ்ச்சித்தன்மை இருக்கக் கூடாது.

நிகழ்வில் இடம்பெற்ற அசாதாரண நிலை என்பது முறையான திட்டமிடல் செய்யப்பட்டிருந்தால் கட்டுப்படுத்தக்கூடியதாகவே பலர் குறிப்பிடுகிறார்கள்.

நிகழ்ச்சி குறித்த அறிவிப்புகள், நுழைவுச்சீட்டுகளால் ஏற்பட்ட குழப்பங்கள், பங்கேற்கும் கலைஞர்களில் இறுதி நேரத்தில் செய்யப்பட்ட மாற்றங்கள், மைதான ஏற்பாடுகள், பாதுகாப்பு சார் குறைபாடுகள் என பல்வேறு சர்ச்சைகள் குழப்பத்தின் காரணிகளாக சுட்டிக்காட்டப்படுகின்றன.

மறுபக்கத்தில் நிகழ்வை பார்வையிடச் சென்ற மக்களை தரக்குறைவாக சித்திரிக்கும் வகையிலும் சிலர் விமர்சிக்கிறார்கள். அவர்களில் சிலர் செய்த பிழைகளை ஒட்டுமொத்த யாழ்ப்பாண மக்கள் மீது திருப்புவதென்பது திட்டமிட்ட அரசியலாகவே தென்படுகிறது.

தவறிழைத்த மக்களை நான் கண்டிப்ப தோடு, மண்ணிற்கு வருகை தந்திருக்கும் விருந்தினர்களை சங்கடப்படுத்தாமல் பார்த்துக்கொள்வதும் எமது மரபுசார் பண்பாடு என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறேன்.

ஆக்ரோசமான மனநிலையில் இருக்கும் மக்களைக் கையாள்வது என்பது தனித துவமான ஆளுமைத்திறன். அதிலும் பல்லாயிரக்கணக்கானவர்கள் முற்பதிவு செய்துள்ளார்கள் எனத்தெரிந்திருந்த போது அதற்கான ஏற்பாடுகள் மிகக் கச்சிதமாக செய்யப்பட்டிருக்க வேண்டும்.

யாழ்ப்பாண மாநகரசபை, பொலிஸார் உள்ளிட்ட பாதுகாப்பு பணியில் ஈடுபட்ட அனைவரும் கூடுதல் பொறுப்போடு நடந்திருக்க வேண்டும், அவர்களுக்கான சரியான தகவல்களை ஏற்பாட்டாளர்கள் வழங்குவதை உறுதிப்படுத்தியிருக்க வேண்டும்.

ரசிகர்களைக் கட்டுப்படுத்தும் பணிகளில் மாணவர்கள் அதிகளவில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர் என அறிந்துகொண்டேன். இத்தகைய பணிகளில் முன் அனுபவம் இல்லாத மாணவர்களைக் கொண்டு பல்லாயிரக்கணக்கான ரசிகர்களைக் கையாள எடுக்கப்பட்ட முடிவு என்பது மிகவும் ஆச்சரியமானதாகவும் தவறான முன்னுதாரணமாகவும் அமைகிறது.

ஏற்பாடுகளில் செய்யப்படும் தவறுகள் பெரு நிகழ்ச்சியொன்றின் முடிவை முற்றிலுமாக மாற்றிவிடும் என்பதற்கு நேற்றைய இசைநிகழ்ச்சி ஓர் உதாரணமாகி விட்டது என்பது வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

அத்தோடு, நிகழ்ச்சியின் ஏற்பாட்டாளர்கள் சார்பில் ஊடகங்களில் வெளியிடப்பட்ட கருத்துகள், குறிப்பாக 'யாழ்ப்பாணம் வர யாருக்கும் விருப்பமில்லை. நாம் சமாளித்து வர வைத்துள்ளோம்...' உள்ளிட்ட கருத்துகளின் தாக்கமும் நடந்த நிகழ்வில் தாக்கத்தை செலுத்தியிருக்க வாய்ப்புகள் உள்ளன.

அவர்கள் சொல்ல வந்த கருத்து வேறாக இருக்கலாம், பயன்படுத்திய வார்த்தைகள் மற்றும் தொனிகள் மக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தியதை அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். யாழ்ப்பாணத்துக்கு நல்ல விடயங்களை செய்ய வேண்டும் என்ற பெரு விருப்பம் கொண்டுள்ள சகோதரர் இந்திரன் பத்மநாதன் இவ்விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேவேளை, தென்னிந்திய கலைஞர்கள் மற்றும் ஊடகங்கள் நிகழ்வுகளை வைத்து யாழ்ப்பாண மக்களைப் பற்றிய தவறான அபிப்பிராயங்களை கட்டமைக்க முன்பாக நிகழ்வின் ஏற்பாட்டாளர்களால் ஊடக சந்திப்பொன்று நடத்தப்பட்டு விளக்கம் கொடுக்க வேண்டியதும் அவசியமாகும். இத்தகைய இசை நிகழ்வுகள் எதிர்காலத்தில் இடம்பெற இத்தகைய பொறுப்புக்கூறல்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

யாழ்ப்பாணத்தையும் அதன் மக்களையும் தவறானவர்களாக சித்திரிக்கும் வாய்ப்புகளை யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர் என்ற அடிப்படையில் எவரும் மேற்கொள்ளக் கூடாது என்பதைக் கேட்டுக்கொள்வதோடு, எமது தவறுகளை இனங்கண்டு சுய ஒழுக்கத்தை மேம்படுத்த வேண்டியதும் அவசியம் என்பதையும் வலியுறுத்துகின்றேன்.

அதேவேளை, இதனைப்போல பெருமளவில் மக்கள் ஒன்றுகூடும், இந்திரவிழா, வல்வெட்டித்துறை பட்டத்திருவிழா, ஆலய விழாக்கள் உள்ளிட்டவற்றில் கண்ணியத்தோடு செயற்பட்டவர்கள் எம்மக்கள் என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

ஆகவே, கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற தவறுகளில் இருந்து கற்றுக்கொண்டு எதிர்காலத்தில் இன்னும் சிறப்பான வகையில் நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என துறைசார்ந்தவர்களிடம் நான் கேட்டுக்கொள்கிறேன்.

இதுவல்ல யாழ்ப்பாண மக்களின் அடையாளம். - என்றுள்ளது. (05)

# மஹாகவி காளிதாஸ் நாடக வைபவம் திருமலையில்

(ஹஸ்பர் ஏ.எச்)

கிறிஸ்துக்குப் பின் 515 தொடக்கம் 525 வரையிலான காலப்பகுதியில் இலங்கையின் அனுராதபுர ஆட்சி காலத்தில் மௌரிய வம்சத்தை சேர்ந்த குமாரசேன மற்றும் குமாரதாசர் அரசனின் ஆட்சி காலத்தில் இலங்கைக்கு வருகை தந்த மகாகவி காளிதாசர் அகால மரணம் அடைந்தார். அவரது சிதை இலங்கையின் எரியூட்டப்பட்ட போது ராஜ்யத்தின் மன்னரும் அவருடைய குடும்பத்தை சேர்ந்த ஏழு பேர் உடன்கட்டை ஏறி தங்களுடைய உயிரை மாய்த்துக் கொண்டார்கள் என இலங்கை வரலாற்றில் மகாவம்சம் கூறும் கதையாகும்.



இந்நாடகத்தினை எழுத்துருவாக்கம் செய்தவர் முன்னாள் கிழக்கு மாகாண கலாசார பணிப்பாளர் உபநந்த வெலிக்கல அவர்களும் மற்றும் மொழிபெயர்ப்பு செய்தவர் நாடக கலைஞர் மு.காளிதாஸ் அவர்களுமாவார். இவ்விருவரும் அயராது முயன்று இந் நாடகத்தை தயாரிப்பதற்கான சகல ஆயத்தங்களும் செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நாடகத்தின் ஆரம்ப வைபவமானது களரி அரங்கக்கலை நிதியத்தின் தயாரிப்பில் திருகோணமலை உப்புவெளி முகாமைத்துவ அபிவிருத்தி

பயிற்சிநிலையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

பிரதம அதிதியாக திருகோணமலை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

இந்நிகழ்வில் டவர் மண்டப அரங்கமன்ற உதவி பணிப்பாளர் ஜெயபிரகாஷ் சர்மா, முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி நிலைய பணிப்பாளர் நௌபிக் , முன்னாள் கிழக்கு மாகாண கலாச்சார பணிப்பாளர் உபநந்த ,வெலிக்கல ஓய்வு பெற்ற அதிபரும் மூத்த கலைஞருமான யோகாநந்தம், கிழக்கு மாகாண சிரேஷ்ட கலாச்சார உத்தியோகத்தர் குணபாலன், மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் ஸ்ரீ .லட்சுமிதேவி, மாவட்ட கலாசார உத்தியோகத்தர் லதா மங்கேஸ், நாடக கலைஞர்கள், நாடக ஆசிரியர்கள், நாடக துறைசார்ந்தவர்கள் மற்றும் எழுத்தாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (05)

# நிர்வாணமாகச் சென்ற நபரினால் மீரிகம வைத்தியசாலையில் பதற்றம்

மீரிகம ஆதார வைத்தியசாலையின் சிறுவர்களுக்கான விடுதிப் பிரிவிற்குள் நிர்வாணமாக சென்ற நபரால் குறித்த வைத்தியசாலையில் பதற்றமான நிலை ஏற்றபட்டுள்ளது. இந்த சம்பவம் கடந்த 8 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

குறித்த வைத்தியசாலையின் சிறுவர்கள் பிரிவிற்குள் நிர்வாணமாக சென்ற சந்தேகநபர் ஒருவர் குறித்த பிரிவில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் 13 வயது சிறுமி ஒருவர் உறங்கிக்கொண்டிருந்த கட்டிலுக்கு அருகில் அமர்ந்திருந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். குறித்த சிறுமி உறக்கத்தில் இருந்து எழுந்த நிலையில் அவரது கட்டிலுக்கு அருகில் நிர்வாணமாக இருந்த சந்தேக நபரைக் கண்டு சத்தமிட்டு அலறியுள்ளார்.

சிறுமியின் அலறல் சத்தத்தால் சந்தேக நபர் வைத்தியசாலையில் இருந்து தப்பிச்சென்றுள்ளார். இதனையடுத்து வைத்தியசாலை ஊழியர்கள் மீரிகம பொலிஸாருக்கு இது தொடர்பில் முறைப்பாடு வழங்கியுள்ளனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் இது தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (05)

# திருகோணமலை பொது வைத்தியசாலையில் உயிரிழந்தோர் உடல்களை பெறுவது தாமதம்

திடீர் மரண விசாரணை அதிகாரி பற்றாக்குறையின் காரணமாக திருகோணமலை பொது வைத்தியசாலையில் இருந்து இறந்த உடல்களை உரிய நேரத்தில் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை பொது வைத்தியசாலையில் உயிரிழந்தோர் உடல்களை சரியான நேரத்தில் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளதாகவும், மரண விசாரணை தொடர்பான ஆவணங்களை பெற்றுக்கொள்வதில் தாமத நிலை ஏற்படுவதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் மேலும் கூறுகின்றனர்.

திருகோணமலை ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட மக்களை கொண்ட பிரதேசமாகும். திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு பல்வேறு இடங்களில் இருந்தும் சாதாரண சிகிச்சைகளுக்காகவும், மேலதிக சிகிச்சைகளுக்காகவும் நோயாளிகள் வருகை தருகின்றனர். இதனால் அங்கு பதிவாகும் மரணங்களின் வீதம் ஏனைய பிரதேசங்களை விட அதிகமாகும்.

அத்துடன், பிரேத பரிசோதனைகளை மேற கொள்வதற்காகவும் ஏனைய பிரதேச வைத்தியசாலைகளில் இருந்தும் இறந்த உடல்கள் கொண்டுசெல்லப்படுகின்றன.

இந்நிலையில், ஏனைய பிரதேசங்களில் இரண்டுக்கு மேற்பட்ட திடீர் மரண விசாரணை அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ள நிலையில், திருகோணமலைக்கு ஒரே ஒரு திடீர் மரண விசாரணை அதிகாரி மாத்திரமே நியமிக்கப்பட்டிருக்கிறார். அவரும் சுகவீனமடைந்த நிலையில் காணப்படுகிறார். இதனால் இறந்த உடல்களை பெற்றுக்கொள்வதிலும் அதற்கான ஆவணங்களை பெற்றுக்கொள்வதிலும் மக்கள் பல்வேறு விதமான அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். திருகோணமலை பொது வைத்தியசாலையில் நாளாந்தம் அண்ணளவாக மூன்றுக்கு மேற்பட்ட மரணங்கள் பதிவாகின்றன. அத்துடன், வேறு வைத்தியசாலைகளில் இருந்தும் இறந்த உடல்கள் பிரேத பரிசோதனைக்காக இங்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. தற்போது திடீர் மரண விசாரணை அதிகாரி ஒருவர் மாத்திரமே வைத்தியசாலையில் கடமையாற்றி வருவதால், மேலதிகமாகமாக அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (05)

# 156 கிலோ மீற்றர் சைக்கிள் ஓட்டபோட்டியில் காத்தான்குடி உனைஸ் சாதனை படைப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

-காத்தான்குடி ஏ.எம். உனைஸ் கடந்த சனிக்கிழமை பொத்துவில் அறுகம்பை கடற்கரை தொடக்கம் பாசிக்குடா வரை பிரமாண்டமாக நடைபெற்ற சைக்கிள் ஓட்டப் போட்டியில் முதலாவது இடத்தைப் பெற்று காத்தான்குடி மண்ணுக்கு பெருமை சேர்த்துள்ளார்.

156 கிலோமீற்றர் தூரத்தினை நான்கு மணித்தியாலம் நாற்பது நிமிடத்தில் இவர் ஓடி முடித்துள்ளார்.

இப்போட்டி நாற்பது வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு நடைபெற்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். (05)



# சிறுவர்களுக்கு சிகரெட் விற்பனை 8 கடை உரிமையாளர்கள் கைது



சிறுவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்த 8 கடை உரிமையாளர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஹிக்கடுவ பொலிஸ் பிரிவிற்குப்பட்ட பிரதான பாடசாலைகளுக்கு அருகில் கடைகளை நடத்தி வந்த 8 பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸார் முன்னெடுத்த விசாரணையின் பிரகாரம் சந்தேகத்திற்குரிய கடை உரிமையாளர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறித்த கடைகளில் இருந்த சிகரெட்டுக்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

பாடசாலைகளுக்கு அருகில் முன்னெடுக்கப்படும் வகுப்புகளுக்கு வரும் பாடசாலை மாணவர்களுக்கும் குறித்த சந்தேக நபர்கள் சிகரெட்டுக்களை விற்பனை செய்துள்ளமை விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்பட்டுள்ள விசேட நடவடிக்கையின் மூலம் இந்த குறித்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட கடை உரிமையாளர்களுக்கு எதிராகக் காலி நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர் .(05)

## சிறுவர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் கூட, இவ்வாறான குறைபாடுகள் குழந்தைகள் பிறக்கும்போதே கண்டறியப்படுகிற போதும் அவர்கள் அனைவருக்கும் இந்த அறுவை சிகிச்சை செய்யப்படுவதில்லை. இவ்வாறான குழந்தைகள் பிறந்து 2 வருடங்களு க்குள் குழந்தையின் மூளைவளர்ச்சிக்காக இந்த சத்திரசிகிச்சையை மேற்கொள்ள வேண்டுமென வைத்தியர் தெரிவிக்கின்றார்.

இந்த சத்திரசிகிச்சைக்கு ஐம்பது இலட்சம் ரூபா அல்லது அதனை விட அதிக தொகை செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. தற்போது இந்த அறுவை சிகிச்சை ஒரு சில அரசாங்க மருத்துவமனைகளில் மட்டுமே செய்யப்படுவதால், நோய்வாய்ப்பட்ட குழந்தைகள் அரசு மருத்துவமனைகளில் இதற்காக காத்திருப்பு பட்டியலில் இருக்க வேண்டியுள்ளது.

ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்திய சாலையில் இந்த சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படுவதோடு இதற்காக பயன்படுத்தப்படும் கருவியின் பெறுமதி சுமார் 3-4 மில்லியன் ரூபாவாகும். சுகாதார அமைச்சினால் இந்த கருவி ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையில்; இலவசமாக வழங்கப்பட்ட போதிலும், சத்திரசிகிச்சைக்கான செலவு 6 இலட்சம் ரூபா செலுத்த வேண்டும்.

இதற்கு தீர்வாக சுகாதார அமைச்சிடம் இருந்து இந்த கருவியைப் பெற்று, சத்திரசிகிச்சைக்கான செலவான ஆறு இலட்சம் ரூபா ஜனாதிபதி நிதியில் இருந்து வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன்படி, ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையில் மேற்கொள்ளப்படும் இந்த சத்திரசிகிச்சைக்கான முழு செலவையும் அரசே ஏற்கும்.

இவ்வாறான குறைபாடுள்ள குழந்தைகளுக்கு அறுவைசிகிச்சை செய்யாமல் இருப்பது சமூகத்திற்கும் சுகாதார அமைப்பிற்கும் தீங்காகவே இருக்கும். இந்த சத்திரசிகிச்சைக்காக பெருமளவு பணம் செலவழிக்க வேண்டியுள்ள போதிலும் சிறு குழந்தைகளுக்கு மேற்கொள்ளப்படும் இவ்வாறான சத்திரசிகிச்சைகளுக்கு ஜனாதிபதி நிதியத்தில் இருந்து நிதி உதவி வழங்குவது நாட்டுக்கான எதிர்கால முதலீடாகும்.

எனவே, ஜயவர்தனபுர பெரியாஸ்பத்திரியில் குழந்தைதகளுக்கு மேற்கொள்ளப்படும் செவிப்புலன் மாற்று சத்திரசிகிச்சைக்கு ஜனாதிபதி நிதியத்திலிருந்து 01-01-2024 முதல் அதிகபட்சமாக ஆறு இலட்சம் ரூபா வழங்க ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அனுமதி வழங்கியுள்ளார்.

# ஆஸ்திரேலியப் பெண் பிரஜை ஒருவரின் மீது மசாஜ் நிலைய ஊழியர் துஷ்பிரயோக முயற்சி

ஆஸ்திரேலிய பெண் பிரஜையை கடுகண்ணாவை பிரதேசத்தில் இயங்கும் மசாஜ் நிலையத்தில் வைத்து, அதன் ஊழியர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்த முயற்சித்துள்ளார் என நுவரெலியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர்பில், அந்த பெண் நுவரெலியா பொலிஸ் நிலையத்தில் சனிக்கிழமை முறைப்பாடு அளித்துள்ளார்.

கொழும்பிலிருந்து கண்டிக்குச் செல்லும் வீதியில் கடுகண்ணாவை பிரதேசத்திலேயே குறித்த மசாஜ் நிலையம் இயங்கி வருகிறது.

தன்னிடம் பாலியல் சீண்டலில் ஈடுபட்ட ஊழியர் தொடர்பில் முறைப்பாடளிக்க, அவர் கடுகண்ணாவையிலிருந்து நுவரெலியாவுக்கு சென்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பெண் அளித்த முறைப்பாடு குறித்து நுவரெலியா பொலிஸார் கண்டி, கடுகண்ணாவை பொலிஸாருக்குத் தெரிவித்து, சுற்றுலா பொலிஸாரின் உதவியுடன் மேலதிக விசாரணைகள் தொடர்வதாகப் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

(05)

# கம்பஹா ரயில் நிலையத்தில் ரயிலில் பரவிய தீயால் பதற்றம்

கம்பஹா ரயில் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ரயிலில் திடீரென தீ பரவியுள்ளது.

இந்தத் தீ விபத்து அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த எண்ணெய் ரயிலிலேயே ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஞாயிற்றுக்கிழமை இந்தத் தீ பரவியதாகக் கூறப்படுகிறது.

இதனைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் ரயில்வே ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர். தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. (05)

# முட்டை ஒன்றின் சில்லறை விலை 65 ரூபா வரை அதிகரிக்கும் நிலை

முட்டை ஒன்றின் சில்லறை விலை அடுத்த வாரம் 62 முதல் 65 ரூபா வரை அதிகரிக்கப்படும் என அகில இலங்கை முட்டை வர்த்தக சங்கத்தின் தலைவர் அன்டன் அப்புஹாமி தெரிவித்துள்ளார்.

மொத்த வியாபாரிகள் கோழிப் பண்ணைகளில் ஒரு முட்டையை 53 அல்லது 54 ரூபாவுக்குப் பெற்று ஒரு முட்டையை 58 அல்லது 59 ரூபாவுக்கு சில்லறை விற்பனையாளர்களுக்கு வழங்குவதாகவும் அவர் கூறினார்.

மொத்த வியாபாரிகளால் 53 அல்லது 54 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்படும் முட்டைகளுக்கு ஒரு முட்டைக்கான போக்குவரத்துச் செலவாக ஒரு ரூபாவும் மேலும் மூன்று ரூபாவும் சேர்த்தே சில்லறை விற்பனையாளர்களுக்கு வழங்கப்படுவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

(05)

# கசிப்புடன் இருவர் கைது வவுனியாவில் சம்பவம்

வவுனியா மடுகந்தை விசேட அதிரடிப்படையினரால் கோடா மற்றும் கசிப்புடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து 1000 லீற்றர் கோடா மற்றும் 35 லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டுள்ளது.

விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையிலேயே இவர்கள் இருவரும் கைதாகியுள்ளனர்.

இந்த இரண்டு சந்தேக நபர்களையும் மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (05)



# உலக சாதனை வீரர் எம்.எஸ்.எம்.பர்ஸான் சர்வதேச போட்டிக்காக இந்தியா பயணம்







(அஸ்ஹர் இப்றாஹிம்)

புலனுறுப்புகளால் மெய்சிலிர்க்க வைக்கும் சாகசம் புரிந்து சர்வதேச சோழன் உலக சாதனை புத்தகத்தில் இடம்பிடித்த சாய்ந்தமருதைச் சேர்ந்த எம்.எஸ்.எம்.பர்ஸான் மீண்டும் உலக சாதனைக்காக இம்மாதம் 16 திகதி இந்தியா பயணமாகவுள்ளார்.

இந்தியாவின் சென்னை மாநகரில் 18 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள சர்வதேச திறந்த கராட்டே சம்பியன்சிப் போட்டியிலும், 19 ஆம் திகதி மதுரையில் நடைபெறவுள்ள சர்வதேச சோழன் உலக சாதனை புத்தகத்தில் இடம்பிடிப்பதற்கான போட்டியிலும் கலந்து கொள்ளவுள்ளார்.

கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரியின் பழைய மாணவரான இவர் இந்தியாவின் மதுரை மாநகரில் இம்மாதம் 19 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்து உலகின் 26 நாடுகளில் வியாபித்துள்ள சோழன் உலக சாதனை புத்தக நிறுவனம் ஒழுங்கு செய்துள்ள மேற்படி உலக சாதனை நிகழ்வில் இலங்கைப் பிரதிநிதியாக கலந்து கொள்ளும் இவர் ஐந்து ஓடுகளை ஒரே நேரத்தில் உடைத்தல், இரண்டு கண் இமைகளாலும் 10 மி.மீ.கம்பியை வளைத்தல், இரண்டு கண் துருவங்களாலும் சங்கிலியால் பாரம் தூக்குதல், மூக்கினூடாக குளிர் பானம் அருந்துதல், பல்லினால் தேங்காய் உரித்தல், மூக்கினால் வயரை விட்டு அதனை வாய் வழியாக எடுத்து மின் குமிழை எரியச் செய்தல், மூக்கினூடக 4 அங்குல கத்தரிக்கோலை செலுத்துதல், பல்லில் வைத்து 10 மி.மீ.கம்பிகள் இரண்டை வளைத்தல், வயிற்றில் பாரமான கற்களை வைத்து சுத்தியலால் உடைத்தல் , உடம்பு பாகங்களினால் ஓடுகளை உடைத்தல் , மரப்பலகையில் கையினால் ஆணிகளை அடித்து ஏற்றுதல் , மரப்பலகைகளை கைகளினால் உடைத்தல் , நாணய குற்றிகளை இரு கண்களுக்குள்ளும் வைத்து மறைத்தல், பல்லினால் 15 கிலோ கிராம் எடையை தூக்குதல், பெப்ஸி குளிர்பான அலுமினிய டின்களை கையால் உடைத்தல் போன்ற 16 சாதனைகளை உலக சாதனைக்காக நிலை நாட்டவுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும

.(05)

## கல்முனை கிறீன் பீல்ட் முஹ்யித்தீன் மஸ்ஜித்துக்கு ரஹ்மத் பௌண்டேஸனால் காசோலை வழங்கல்!



(எம்.எம்.ஜெஸ்மின்)

வை.எம்.எம்.ஏ.பேரவையின் ஒருங்கிணைப்பில் கல்முனை மாநகர முன்னாள் பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூர் கல்முனை கிறீன் பீல்ட் முஹ்யித்தீன் மஸ்ஜித்துக்கு ஒன்பதாம் கட்ட நிதி உதவியாக மேலும் ரூபா ஆறு லட்சத்து தொண்ணூறாயிரம் (690,000ஃஸ்ரீ) பெறுமதியான காசோலை அவரது உத்தியோகபூர்வ அலுவலகத்தில் வைத்து வழங்கி வைத்தார். இந் நிகழ்வில் பள்ளிவாசல் நிருவாகிகளான செயலாளர் எம்.எச்.ஏ.கரீம், பொருலாளர் ஏ.எம்.றியாஸ், நிருவாக உறுப்பினரான எஸ்.எல்.அர்ஷாட், பௌண்டேசன் உறுப்பினர்கள், மஹல்லாவாசிகள், நலன்விரும்பிகள் கலந்து கொண்டனர். (05)

## வாடகைக்குபெற்ற காரை பாகங்களாக பிரித்து விற்க முயன்ற இருவர் கைது

வாடகைக்கு பெற்றுக்கொண்ட காரை பல பாகங்களாக பிரித்து விற்பனை செய்ய முயன்ற இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் எஸ்வெல்ல மற்றும் நெலும்தெனிய ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 38 வயதுடையவர்களாவர்.

கம்பஹா குற்றப் புலனாய்வு பிரிவினர்களுக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர்கள் நிட்டம்புவ பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த காரானது அநுராதபுரம் பிரதேசத்தில் உள்ள வாகன வாடகை சேவை நிலையம் ஒன்றில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது என விசாரணையில் தெரியவந்துள்ளது. (05)

## கழுத்தறுக்கப்பட்டு ஒருவர் முல்லேரியாவில் கொலை!

முல்லேரியா பிரதேசத்தில் கழுத்தறுக்கப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் 38 வயதுடைய இரு பிள்ளைகளின் தந்தையாவார்.

இவர் வெள்ளிக்கிழமை இரவு தனது வீட்டில் மதுபான விருந்துபசார நிகழ்வொன்றை நடத்தியுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் தொடர்பில் இதுவரை எந்தவொரு தகவலும் கிடைக்கவில்லை எனப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முல்லேரியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

## கயிறு கழுத்தில் இறுகி சிறுவன் உயிரிழப்பு

### நுவரெலியாவில் சோகம்

தனிவீட்டில் வசித்த பாடசாலை சிறுவன் ஒருவர் வீட்டுக்கு அருகில் தேயிலைத் தோட்டத்தில் சவுக்கு மரத்தில் கயிறு கட்டி விளையாடிக் கொண்டிருந்த போது கயிறு கழுத்தில் இறுகிய நிலையில் உயிரிழந்த சம்பவம் நுவரெலியா பொலிஸ் பிரிவுக்குப்பட்ட மாகஸ்தோட்ட பகுதி யில் ஞாயிற்றுக்கிழமை பகல் ஒரு மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் சிறுவன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக நுவரெலியா குற்றப்புலனாய்வு பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

நுவரெலியா மாகாஸ்தோட்ட பகுதியில் தனிவீட்டில் தாய் மற்றும் இரு பெண் பிள்ளைகள் ஆண் பிள்ளை ஒருவருடன் நால்வர் வசித்து வருகின்றனர்.

தனது கணவன் இறந்து ஐந்து வருடங்கள் ஆகிய பின் தாய் பிள்ளைகளைப் படிக்கவைத்து வாழ்ந்து வரும் நிலையில் மூத்த மகள் பல்கலைக்கழக படிப்புக்குச் சென்ற பின் வீட்டில் சிறிய மகள் தாய் மற்றும் சம்பவத்தில் உயிரிழந்த சிறுவன் என மூவர் வசித்து வந்துள்ளனர்.

இந்த நிலையில் வழமைபோல சிறுவன் உயிர் பிரிந்த இடத்தில் சவுக்கு மரம் ஒன்றில் கயிறு கட்டி விளையாடிக் கொண்டிருந்துள்ளார்.

தாய் தனக்குத் தலைவலியென வீட்டில் படுத்து இருந்த நிலையில் பகல் ஒரு மணியளவில் மரத்தில் விளையாடிய சிறுவன் கழுத்தில் கயறு இறுகி துடிக்கிறான் காப்பாற்றுங்கள் எனச் சம்பவத்தை அவதானித்த அருகிலிருந்த வீட்டார் கூச்சலிட்டுள்ளனர்.

இதையடுத்து மரத்துக்கு அருகில் ஓடியவர்கள் சிறுவனை மீட்டபோதிலும் சிறுவன் மயக்கத்தில் இருப்பதாக உணர்ந்து 1990 அவசர அம்புலன்ஸுக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

பின் அவசர அம்புயூலன்ஸ் சம்பவ இடத்திற்கு வருகை தந்த வைத்தியர்கள் சிறுவனைப் பரிசோதித்த போது சிறுவன் உயிர் இழந்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

அதேநேரத்தில் சம்பவ இடத்திற்கு நுவரெலியா பொலிஸார் விரைந்து விசாரணைகளை முன்னெடுத்தனர்.

மேலும் சடலம் நுவரெலியா மாவட்ட நீதிவானின் மரண விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட பின் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்படவுள்ளதாக விசாரணைகளை முன்னெடுக்கும் நுவரெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

(05)

## ஏறாவூரில் கோரவிபத்து் இளம் குடும்பஸ்தர் சாவு

மட்டக்களப்பு - கொழும்பு நெடுஞ்சாலையில் ஏறாவூர் ஆறுமுகத்தான் குடியிருப்பு பகுதியில் இடம்பெற்ற விபத்தில் சிக்கி படுகாயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இளம் குடும்பஸ்தர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து தொடர்பில் இரண்டு வடி ரக வாகனங்களின் சாரதிகள் இருவரை பொலிஸார் கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற இந்த விபத்தில் ஏறாவூர் 4 ஆம் குறிச்சியைச் சேர்ந்த சண்முகராசா சுதர்ஷன் (வயது 37) என்பவரே உயிரிழந்துள்ளார்.

குறித்த நபர் நகைக் கடை கூலித் தொழிலாளி என்பதோடு, அவர் 4 வயது பிள்ளை மற்றும் 6 மாத குழந்தையின் தந்தையுமாவார்.

குறித்த நபர் மோட்டார் சைக்கிளில் வீதியால் பயணித்துக்கொண்டிருந்தபோது, வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வடி ரக வாகனத்தைக் கடக்க முற்பட்டுள்ளார். அப்போது அதன் சாரதி திடீரென வாகனத்தின் கதவைத் திறந்துள்ளார். கதவின் பலமான தள்ளுகையால் வீதியில் நிலை தடுமாறி அந்த நபர் விழுந்துள்ளார்.

அவ் வேளை பின்னால் வந்த மற்றொரு வடி ரக வாகனம் வீதியில் விழுந்த நபர் மீதேறிச் சென்றுள்ளது.

இதில் படுகாயமடைந்த நபர் அங்கிருந்தவர்களால் ஏறாவூர் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, பின்னர், மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். எனினும், சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார் என உறவினர்கள் தெரிவித்தனர். மட்டக்களப்பு சட்ட வைத்திய அதிகாரியின் உடற்கூற்றாய்வுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டு ஐயன்கேணி மணிபுரம் பொது மயானத்தில் உடல் அடக்கம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.02.2024இல் வெளியிடப்பெற்றது.